| | | | | |
|---|---|---|---|---|
| ரோயல் கல்லூரி –கொழும்பு 07<br>Royal College – Colombo 07 | | | | |
| மூன்றாம் தவணைப் பரீட்சை -2022(2023)<br>**Third Term Exam -2022(2023)** | | 16 | I | II |
| இஸ்லாம்<br>Islam | தரம் 10<br>Grade 10 | நேரம் 2 மணித்தியாலம்<br>Time 2 Hours | | |

பகுதி I

1. இஸ்லாத்தின் நம்பிக்கையைத் தொகுத்துத் தருவதற்காக தோற்றம் பெற்றது கலை எது?
   1) அகீதா, 2) ஷரீ ஆ 3) வேதம், 4) ஸுஹுப்

2. "பாதையில் தீங்கிழைக்கும் பொருட்கள் அகற்றல். "என்பது ஈமானின்
   1) அதி உயர்ந்த கிளை, 2. அதி தாழ்ந்த கிளை
   3) ஈமானுடன் தொடர்பற்றது 4. ஈமானின் கிளைகளுல் அடங்காதது

3. மனித சமூகத்திற்கு நேர்வழி காட்ட ரிஸாலத் அவசியப்படுவதற்கான காரணங்களுல் அடங்காதது.
   1) உயர்ந்த ஒழுக்க விழுமியங்கள் அறிய.
   2) மனிதனுக்கு நேர்வழியைக் காட்ட
   3) மனோஇச்சைப்படி வாழ
   4) மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கத்தை அறிந்து கொள்ள.

4. ஓரிடத்தில் நீண்டகாலமாக தேங்கியுள்ள இலை, பாசி, கனிப்பொருற்கள் போன்றவற்றால் மாற்றமடைந்த பெரிய அளவில் காணப்படும் நீர்
   1) அல் மாஉத் தஹூர் 2) அல்மாஉத் தாஹிர்
   3) அல்மாஉன் முத்லக் 4) அல்மாஉன் முஸ்தஃமல்

5, பின்வருவனவற்றுல் சாதாரண நஜீஸில் இருந்து விதிவிலக்கு பெற்றது
   1) மதி 2) வதி
   3) சாப்பிட அனுமதிக்கப்படாத விலங்குகளின் பால் 4) தாய்ப்பால்

6) பின்வருவனவற்றுல் பர்ள் ஐனுக்கான உதாரணமாக அமைவது
   1) மார்க்க அறிஞர்கள் உருவாக்குவது 2) குடும்பத்தை பராமரித்தல்
   3) ஜனாஸாவுக்கான கடமைகள் செய்தல் 4) சுற்றுப்புற சூழல் சுத்தமாக வைத்திருத்தல்.

7) ஸகர் எனும் நரகில் நுழையக்கூடியவர்கள்
   1) தொழாதவர்கள் 2) தொழுபவர்கள்
   3) விட்டு விட்டுத் தொழுபவர்கள் 4) பொய் சொல்பவர்கள்



kalvi.lk

8) மறுமை நாளில் ஓர் அடியானின் செயல்பற்றி விசாரிக்கப்படும் போது முதன்மையாக கேட்கப்படுவது எது?

1) தொழுகை பற்றி 2) நோன்பு பற்றி 3) நல்லமல்கள் பற்றி 4) ஸக்காத் பற்றி

9) "அதிகாலை இறைவனிடத்தில் நான் காவல் தேடுகின்றேன்" என பொருள்படும் வசனத்தைக் கொண்ட ஸூரா எது?

1) ஸூரா பலக் 2) ஸூரா நாஸ் 3) ஸூரா இஃலாஸ் 4) ஸூரா பாத்திஹா

10) "நிச்சயமாக அல்லாஹ் உங்கள் உடல்களையோ முகங்களையும் பார்ப்பதில்லை மாறாக உங்களுடைய உள்ளங்களையே பார்க்கின்றான்" என்பது

1) அல்குர்ஆன் வசனம் 2 ஹதீஸ் 3) இமாம்களின் கூற்று 4) நற்சிந்தனை

11) பின்வருவனவற்றுள் ஸூரா லூக்மானில் இடம்பெற்ற நல்லடியார்களின் பண்புகளில் ஒன்று

1) அல்லாஹ்வின் நல்லடியார்கள் பூமியில் பணிவாக நடப்பார்கள்
2) அறிவினர்களோடு தருத்திக்காமல் கண்ணியமாக விலகிடுவார்கள்
3) வீண்விரயமோ உலோபித்தனமோ இல்லாமல் நடுநிலையில் செலவு செய்வார்கள்
4) சத்தத்தைத் தாழ்த்திக் கொள்வார்கள்.

12) "அல்வதூத்" என்பதன் பொருள்

1) அளவற்ற அருளாளன் 2 நிகரற்ற அன்புடையன்
3 )மிகவும் இரக்கமுடையவன் 4) என்றும் நிலைத்திருப்பவர்

13) "உங்களிடமுள்ள (பொருட்கள்) யாவும் செலவழிந்து விடும். அல்லாஹ்விடத்தில் உள்ளதோ ( என்றென்றும்) நிலை பெற்றிருக்கும் "எனும் அல்குர்ஆன் கூற்று வலியுறுத்தும் நற்பண்பு யாது?

1) நாணயம் 2) ஈகை 3) தியாகம் 4) அன்பு

14) பின்வருவனவற்றுள் வஹீ மத்துலுவுக்கான உதாரணம்

1) அல்குர்ஆன் 2 )ஹதீஸ் 3) கனவு 4)அசரீரி

15) "சந்தேகமூட்டக்கூடியதை விட்டுவிடு சந்தேகம் உண்டாக்காதவற்றை பின்பற்று" என்ற ஹதீஸ் விளக்கும் ஆன்மீக பண்பு யாது?

1) இக்லாஸ் 2) தவ்பா 3) வரஉ 4) ஸுஹூத்



kalvi.lk

16. அல்குர்ஆன் தொகுக்கும் குழுவுக்கு தலைமை தாங்கிய சஹாபி

1) அபூபக்கர் ரழி
2) அலி ரழி
3) ஸைத் பின் ஸாபித் ரழி
4) உதைபா அல் யமானி ரழி

17. இஜ்மா என்று அரபு பதம் குறித்து நிற்கும் பொருள் அல்லாதது.

1) ஒன்று சேர்த்தல்
2) உறுதி கொள்ளல்
3) ஒப்பு நோக்குதல்
4) ஏகோபித்த முடிவு

18. அரபு நாட்டின் கிழக்கெல்லை

1) பாரசீக வளைகுடா
2) செங்கடல்
3 அரபுக் கடல்
4) சிரியா பாலைவனம்.

19. அன்றைய அரபிகளிடம் காணப்பட்ட மோசமான நடத்தைகளில் ஒன்று

1) மொழிப் புலமை
2) சுதந்திர வேட்கை
3) வீரம்
4) பழிக்கு பழி வாங்குதல்

20. பின்வருவனவற்றுல் முதநப்பி எனப்படுவோர்

1) இறுதி நபி
2) முதல் நபி
3) போலி நபி
4) முஹம்மத் நபி

21. நபியவர்கள் ஹிஜ்ரத் சென்ற நாடு

1) ஹப்ஸா
2) மதீனா
3) யெமன்
4) ஷாம்.

22. நபி ஸல் அவர்களும் அவர்களது குடும்பத்தினரும் ஷீபு அபூதாலிப் பள்ளத்தாக்கில் எத்தனை ஆண்டுகள் ஒதுக்கி வைக்கப்பட்டனர்?

1) இரண்டு
2) மூன்று
3) நான்கு
4) பத்து

23. கீழ் உள்ளவற்றுல் நேர் எதிரான கருத்தை தருக விடை யாது?

1) யவ்முல் கியாமா - யவ்முல் அகிரா
2) கல்புன் ஸலாம் - கல்புல் முத்ம இன்னா
3) முஸ்லிம் - காபீர்
4) அஹ்லாக் ஹஸனா - மகாரிமுல் அஃலாக்

24. வியாபார கொடுக்கல் வாங்கல்களில் ஆகுமாக்கப்பட்ட வியாபார முறை.

1) பதுக்கல்
2) கலப்படம்
3) வாக்கு மீறாமை
4) பொய் சத்தியம்

25. வியாபாரம் செல்லும்படியாவதற்கான அடிப்படை நிபந்தனைகளுள் வாங்குபவர் மற்றும் விற்பவர்களது அடிப்படை பண்புகளில் அடங்காதது

1) பருவமடைந்தவராக இருத்தல்.
2) புத்தி சுயாதீனம் உடையவராக இருத்தல்
3) வியாபாரம் பற்றிய விபரம் தெரிந்தவராக இருத்தல்
4) முஸ்லிமாக இருத்தல்

26. விவசாய நடவடிக்கைகளில் தொழில்நுட்ப முறையை பயன்படுத்த முடியும் என்பதற்கான நபி ஸல் அவர்களின் கூற்றுக்களுக்கு ஆதாரமாக விளங்குவது

1) உரிமை கோரப்படாத நிலத்தை ஒருவர் பயன்படுத்தி வளமாக்கினால் அவரே அதற்கு தகுதியானவர்
2) ஒருவருக்கு நிலம் இருப்பின் அதில் அவர் பயிர் செய்யட்டும் அல்லது அதனை தன் சகோதரனுக்கு தர்மம் செய்யட்டும்.



kalvi.lk

3) மதினாவாசிகள் பேரிச்ச மரங்களில் மகரந்த சேர்க்கை செய்து உற்பத்தியைப் பெருக்க எடுத்த முயற்சியை நபிய நபியவர்கள் அனுமதித்தமை
4) கைபர் யுத்த வெற்றியின் போது கிடைத்த விவசாய நிலத்தை விவசாயம் செய்பவருக்கு பகிர்ந்து அளித்தமை.

27. இரு தீவிரங்களுக்கிடையில் நடுநிலையான நிலையை ஏற்பது அரபியில்

1) உம்மத்தன் வசதன் 2 வஸதிய்யா 3) பிக்ஹுல் அவ்ளவிய்யாத் 4) கைறு உம்மதன்

28. உடம்பில் உள்ள ஓர் சதை துண்டு, அது சீர்கெட்டால் முழு உடம்பும் சீர்கெட்டு விடு என்ற ஹதீஸின் படி சதை துண்டு என்பது குறித்து நிற்பது
1) நாவு 2) கை 3) உள்ளம் 4) வாய்

29. ஜபீரத் என்பது

1) கைகளை மண்ணைக்கொண்டு தடவுதல்
2) மண்ணில் தோய்த்த கையால் முகத்தை தடவுதல்
3) காயத்திற்கு கட்டு போடல்
4) புலுதியுள்ள சுத்தமான மண்

30. பின்வருவோருல் தமது இளமைப் பருவத்தில் இலக்கிய வல்லுனராக இருந்து சாதனை படைத்தவர்
1) இமாம் புகாரி 2) முஹம்மதின் காசிம்
3) இமாம் ஷா:பி 4)இமாம் ஷிபவைஹி

31. இஸ்ரவேலர் சமூகத்தை பிர்அவ்னின் அடிமைத்துவத்திலிருந்து விடுவித்த நபி

1) முஹம்மத் நபி 2) யூசுப் அலை 3) மூஸா அலை 4) இப்ராஹிம் அலை

32 பின்வருவனவற்றுள் வார்த்தையுடன் தொடர்புடைய இபாதத்

1) குர்ஆன் திலாவத் 2) ஸக்காத் 3) பொறுமை 4) தொழுகை

33. இஸ்லாம் மனிதர்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளின் பண்புகளில் அடங்காதது
1) இது ஒவொருவரினதும் பிறப்புரிமை .
2) எவராலும் மறுக்க முடியாது
3) காலத்தால் இடத்தால் வேறுபடக் கூடியது
4) காலாவதி அற்றது



kalvi.lk

34. திருமண உறவால் ம ஃரமாக்கப்பட்டவர்கள்

1. தாயின் தாய் 2. மகனின் புதல்வி
3, தந்தையின் மனைவி 4. செவிலித்தாய்

35.முரண்பட்ட அகீதா பிரிவில் அடங்காத பிரிவினர்

1) கதரிய்யா 2) ஜபரிய்யா
3 அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத் 4) ஷிஆ

36.உலகில் முதலாவதும் இறுதியாகவும் அருளப்பட்ட வேதம் முறையே

1) தவ்ராத், ஸபூர் 2) இன்ஜீல், புர்கான் 3) தவ்ராத், புர்கான் 4) ஸபூர், புர்கான்

37. குளிப்பை குறிக்கப் பயன்படும் அரபுச் சொல்

1) ஹதஸ் 2) உஸ்ல் 3 மஸ்ஹு 4) அத்தஹாரத்

38. ." அல்லாஹ் புனிதமாக்கிய உயிரை முறையான நீதி விசாரணை இன்றி கொள்ளாதீர்கள் "எனும் அல்குர்ஆன் வசனம் வெளிப்படுத்தும் மனிதனது அடிப்படை உரிமைகளில் ஒன்று

1) உயிர் வாழ்வதற்கான உரிமை
2) மத உணர்வுகளுக்கு பாதுகாப்பு வழங்க உரிமை
3) சொத்துக்களை பாதுகாப்பதற்கான உரிமை
4) சமத்துவத்திற்கான உரிம்மை

39. நபி ஸல் அவர்கள் மதினா காலத்தில் யூதர்களுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு நிகழ்ந்தது

1) ஒன்று 2) இரண்டு 3) மூன்று 4) நான்கு

40. தொழுகை இஸ்லாத்தில் எத்தனையாவது கடமை

1 ) இரண்டாவது 2) மூன்றாவது 3) நான்காவது 4) இறுதியானவன்

**பகுதி II**

- **முதலாம் வினா உட்பட்ட மேலும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

01) 1. 10 ஸுஹுபுக்கள் கொடுக்கப்பட்ட இரு நபிமார்களின் பெயர்களைத் தருக.

2. இபாதத் என்ற அரபுச் சொல்லின் மொழிக் கருத்துக்கள் 2 தருக.
3. முதல் இறக்கப்பட்ட சூறாவையும் இறக்கப்பட்ட ஆயத்துக்களின் எண்ணிக்கையும் முறையே தருக.
4. அன்பு வைத்தலின் பிரதான இரு பிரிவுகளும் யாவை?



kalvi.lk

5. முதல் மற்றும் இறுதி அத்திஹ்ரிய்யாத் இருப்பின் பெயர்களை முறையே தருக.
6. இஸ்லாத்தின் முதன்மையான துனை மூலாதாரங்கள் இணை்டும் யாவை?
7. புலமை சாரந்த சேவைத் தொழில்களுக்கு 2 உதாரணம் தருக.
8. ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டுகளில் ஹபஸாவிற்கு நபி(ஸல்) அவர்கள் முஸ்லீம் மக்களை ஹிஜ்ரத் அனுப்பினார்கள்?
9. ''ரஹ்மதுல்லில் ஆலமீன்'' ''காப்பதுல் லின்னால்'' ஆகிய அரபு சொற்களின் பொருள்களைத் தருக.
10. ஜாஹிலிய்யாக் காலத்தில் காணப்பட்ட திருமண முறைகள் இரண்டும் யாவை?

( 2X10=20 புள்ளிகள்)

02) 1. இல்முல் அகீதாவின் அடிப்படைகள் இரண்டு யாவை?
2. அஸ்ஸம் இய்யாத் என்ற அகீதா பிரிவில் அடங்கும் பின்வருவனவற்றிற்கு பொருள் தருக.
   1. ப.ஃஸ் 2. ஹிஸாப் 3. ஸிராத்
3. பிற்காலத்தில் தூய அகீதாவில் பிளவுகள் ஏற்பட்டமைக்கான காரணங்கள் 5 ஐக் குறிப்பிடுக.

( 2+3+5=10 புள்ளிகள்)

03) 1. தொடக்கின் 2 வகைகளும் யாவை?
2. நஜீஸின் வகைகள் மூன்றினையும் குறிப்பிட்டு அவற்றிற்கு ஒவ்வோர் உதாரணம் தருக.
3. கடுமையான நஜீஸ் படிந்த ஆடையை நீர்நிலைகளில் சுத்தம் செய்யும் முறையினை விளக்குக.

( 2+3+5=10 புள்ளிகள்)

04) 1. இபாதத், இமாரத் என்ற பதங்களை விளக்குக.
2. குனூத் ஓதப்படும் சந்தர்ப்பங்கள் 3 தருக.
3. இ.ஃதிதால் நிலையில் ஓதப்படும் ஓதலை தமிழில் எழுதுக. ( 2+3+5=10 புள்ளிகள்)

05) 1. பொருளீட்டல் வணக்கமாக வேண்டுமாயின் கடைபிடிக்க வேண்டிய இஸ்லாத்தினை வழிக்காட்டல்கள் இரண்டினைத் தருக.
2. இஸ்லாத்தின் உழைப்பு முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் 3ஐத் தருக.
3. அஜ்னபிகளுடன் பழகும் போது பேண வேண்டிய இஸ்லாமிய வரையறைகள் 5 இனைக் குறிப்பிட்டு விளக்குக. ( 2+3+5=10 புள்ளிகள்)

06) 1. நற்பண்பைக் குறிக்க பயன்படும் அரபுச் சொற்கள் இரண்டைத் தருக.
2. உள்ளத்தின் மூன்று நிலைகளைக் குறிப்பிட்டு விளக்குக.
3. கியாஸின் அர்கான்களை குறிப்பிட்டு விளக்குக. ( 2+3+5=10 புள்ளிகள்)

07) பின்வருவன இரண்டு பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
   1. உடல் உள ஆரோக்கியம் 2. ஜாஹிய்யாக் கால சமூக அமைப்பு
   3. இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமை 4 அல்குர் ஆன் தொகுப்பு.

( 2+3+5=10 புள்ளிகள்)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

*அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...*

Kalvi.lk

Whatsapp
075 287 1457